

கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தஞ்சாவூர் மத்திய மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளரும், தலைமைக் கழக பேச்சாளருமான வரகூர் க.காமராஜ் அவர்களை 5.2.2026 அன்று நேரில் சந்தித்து, உடல் நலம் விசாரித்தார். உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் து.செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் தாட்கோ தலைவர் நா. இளையராஜா, மாநகரக் கழகச் செயலாளரும், மாநகராட்சி மேயருமான சண். ராமநாதன் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

கார்ப்பரேட்டுகளுக்காக பொதுமக்களின் உயிரைப் பணயம் வைக்கும் ஒன்றிய அரசு ‘மீல்ஸ் கிட்ஸ்’ தொடர்பாக

# கொள்கைகளை வகுக்காமல் மாநிலங்களை கைகாட்டி தப்பிக்கப் பார்ப்பதா?

## கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



ஈரோடு, பிப்.8–

Meal kits எனப்படும் சமைக்கத் தயாராக உள்ள உணவுப் பொட்டலங்களின் பாதுகாப்பு மற்றும் லேபிளிங் தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள கொள்கைகள் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன் என்று கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது :–

இதற்கு நடைமுறைக்கு உதவாத பழைய விதிமுறைகளை காட்டியும், மாநிலங்கள் தான் சரிசெய்ய வேண்டும் என்று பொறுப்பை திசைதிருப்பும் வகையிலும், அடாவடியான பதில்களை அளித்துள்ளது ஒன்றிய அரசு.

மிகவும் தீவிரமான இந்த விவகாரத்தில், கோடிக்கணக்கான மக்களின் உயிர்களின் மீது கொஞ்சமும் அக்கறையில்லாமல் செயல்படும் ஒன்றிய அரசுக்கு எனது கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்கிறேன்.

**மாநில அரசுகளுக்கு அல்ல, ஒன்றிய அரசுக்குத் தான் பொறுப்பு!**

நான் எழுப்பிய கேள்வியானது, Meal kits தொடர்பாக கொள்கைகள் வகுப்பது பற்றியது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி, உணவுப் பொருட்களின் தர நிர்ணயம் மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவை ஒன்றிய பட்டியலின் கீழ் வரும் அதிகாரம். மேலும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள FSSAI அமைப்பு தான், ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் பொதுவான உணவுப் பாதுகாப்பு விதிகளை வகுப்பது.

இப்படியிருக்க, Meal kits தொடர்பாக ஏன் ‘கொள்கைகளை வகுக்கவில்லை என்று கேட்டால், மாநிலங்களை அதில் இணைத்துப் பேசுவது பிரச்சினையின் தீவிரத்தை மட்டுப்படுத்தும் மற்றும் தன்னுடைய பொறுப்பை தூக்கித் தூரவீசும் நாணயமற்ற செயல்.

**பொதுமக்களின் உயிரைப் பணயம் வைக்கும் ஒன்றிய அரசு!**

ஒன்றிய அரசு தனது பதிலில், இந்த Meal kitsகளுக்கு, 2020–ஆம் ஆண்டு காலத்து Food Safety and Standards விதிமுறைகளே போதுமானது என்று தெரிவித்துள்ளது. இதைவிட மெத்தனமான, குரூரமான பதிலைப் பார்க்க முடியாது.

இந்த சட்டத்தில் Multi unit pack, assorted pack ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவை Meal kitகளை தனித்துவமாக குறிப்பவை அல்ல. Multi unit pack என்பவை, ஒரே பொருளை பல சிறு பாக்கெட்களாக கொண்டவை. உதாரணம், சிப்ஸ் பாக்கெட்டுகள். Assorted pack என்பது, ஒரே தன்மையைக் கொண்ட வெவ்வேறு சுவை கொண்ட பொருட்கள். உதாரணம், ஒரு பிஸ்கெட் பாக்கெட்டுக்குள் வெவ்வெறு வகை பிஸ்கெட்டுகள். ஆனால், Meal kits என்பவை, காய்கறிகள், இறைச்சி, மசாலாக்கள் போன்றவை உள்ளடக்கப்படும் முற்றிலும் வேறு வகை.

2020ம் ஆண்டு விதிகள், மொத்தமாக எல்லாவற்றுக்கும் ஒரே காலாவதி தேதி இருந்தால் போதுமானது என்று சொல்கிறது. ஆனால், Meal kitகளில் ஒவ்வொரு பொருளும் வெவ்வேறு வெப்பநிலையில் கெட்டுப்போகும் தன்மை கொண்டவை. 2020 விதிகள் உப்பு, சர்க்கரை, கொழுப்பின் அளவை மட்டும் குறிப்பிடச் சொல்கின்றனவே தவிர, அவை அதிகமாக இருந்தால் ‘சிவப்பு நிற எச்சரிக்கை’யை குறிப்பிடச் சொல்லவில்லை. Meal kitகளில் இந்த மூன்றுமே சுவைக்காகவும், கெடாமல் இருக்கவும் அதிகமாக சேர்க்கப்பட வாய்ப்புள்ளது.

மேற்கொண்டு முக்கியமாக, 2020 விதிகளின்படி மொத்த பாக்கெட்டுக்கும் ஒரே ஒரு ஊட்டச்சத்து அட்டவணை கொடுத்தால் போதும். ஆனால், ஒரு Meal kit பாக்கெட்டுக்குள் 3, 4 வெவ்வேறு சிறு பாக்கெட்டுகள் இருக்கும். இவற்றின் ஊட்டச்சத்து தனித்தனியாக அளவிடக் கூடியது. மேலும், சமைக்கும் போது சேர்க்கப்படும் பொருட்களாலும் ஊட்டச்சத்து மாறும்.

**மக்கள் நலனை விட கார்ப்பரேட்களின் நலன் முக்கியம்!**

இப்படி, மிகவும் வேறுபட்ட காரணிகளைக் கொண்ட ஒரு வகைக்கு, பழைய விதியை காரணம் காட்டுவது, அபாயகரமான அலட்சியப் போக்கு.

ஒன்றிய அரசு இப்படி Meal kitகளுக்கு கொள்கைகள் வகுக்காமல் தாமதம் செய்வது, மக்களின் நலனைப் புறந்தள்ளி கார்ப்பரேட்களின் நலனை இந்த அரசு முன்னிலை;படுத்துவதை உறுதிப்படுத்துகிறது.

2025 2026 பொருளாதார ஆய்வறிக்கையின் படி, பதப்படுத்தப்பட்ட உணவுத்துறை 150% இந்தியாவில் வளர்ச்சி கண்டுள்ளது. இதில் Meal kits வகைக்கான சந்தை ஆய்வுத்தரவுகளை எடுத்தால், அது 2033ம் ஆண்டுக்குள் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 14.27 மடங்கு வளர்ச்சி காணும் என கணிக்கப்பட்டுள்ளது. அதாவது, 2024ல் 1.15 லட்சம் கோடியாக இருந்த இந்த சந்தை, 2033ம் ஆண்டுக்குள் 3.83 லட்சம் கோடியாக வளரும்.

இப்படி ஒரு பக்கத்தில் கார்ப்பரேட்கள் அசுர வளர்ச்சி கண்டு கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில் மக்களின் உடல்நலனை பணயம் வைத்திருக்கிறது ஒன்றிய அரசு. முறையான கொள்கைகளும், விதிமுறைகளும் அற்ற ஒவ்வொரு நாள் தாமதமும் கோடிக்கணக்கான மக்களை ஆபத்தை நோக்கி பல அடிகள் முன்னே தள்ளுகிறது.

எனவே, மிக விரைவில் Meal kitகளுக்கான கொள்கைகளை ஒன்றிய அரசு வகுக்க வேண்டும். இனியும் கார்ப்பரேட்களின் நலனுக்காக மக்களின் தட்டில் விஷம் பரிமாறப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் ஒன்றிய அரசின் ஆதரவு பெற்ற

# திட்டங்கள் திறம்பட திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

*புதுடெல்லி, பிப். 8 -*

*நடைபெற்று வரும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராம பஞ்சாயத்துகளில் ஒன்றிய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்கள் திறம்பட திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதா? அப்படியானால் அந்த கிராம பஞ்சாயத்துகளின் திறன் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் அளவீடு செய்துள்ளதா?*

*கடந்த 3 வருடங்களில் பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களின் மூலம் ஒன்றிய அரசு வழங்கிய நிதி மற்றும் அதனால் கிராம பஞ்சாயத்துகள் பெற்ற சிறப்பு திட்டங்கள் குறித்த விவரங்கள் என்ன?*

*தருமபுரி மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் அவற்றின் செயல்திறன் குறித்து கண்காணிக்க ஒன்றிய அரசால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?*



*தருமபுரி போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள பஞ்சாயத்துககளுக்கு நிதி சுயாட்சி, தொழில்நுட்பம் மேம்பாடு மற்றும் பணியாளர்கள் ஆதரவை பெருக்க ஒன்றிய அரசால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்று பஞ்சாயத் ராஜ் அமைச்சர் ராஜுவ் ரஞ்சன் சிங் அலியாஸ் லாலன் சிங்கிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.*



முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் ரூ. 348.59 கோடி மதிப்பீட்டில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள், நுண்ணுயிரியல் ஆய்வுக்கூடங்கள், இந்திய மற்றும் ஓமியோபதி பிரிவுக் கட்டடங்கள், நகர்ப்புற, கிராமப்புற மற்றும் பல்வேறு சுகாதார நிலையக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் புதிய கட்டிடங்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் துவக்கி வைத்தார். உடன் விருத்தாச்சலம் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர்.ஆர்.இராதா கிருஷ்ணன், விருத்தாசலம் நகர மன்றத் தலைவர் மருத்துவர் சங்கவி முருகதாஸ் மற்றும் மருத்துவர்கள் உள்ளனர்.

# எத்தர்களும் பித்தர்களும் ஏமாறப் போகிறார்கள்!

**2026** சட்டமன்றத் தேர்தல் நெருங்கி விட்டது என்றவுடன் அண்ணன் தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசின் செழுமையான ஆட்சியை சகித்துக் கொள்ள முடியாமல் தெம்பிழந்த எடப்பாடியார் மற்றும் சில கட்சியினர் சீற்றம் கொண்டு சீறிப்பாய்ந்துள்ளனர்.

இவர்களில் யாரும் விஜயாலய சோழன் அல்ல. ஆம்! வீழுந்து விட்ட சோழர் சாம்ராஜ்யத்தை மீண்டும் கொண்டு வர நடந்த போரில் தனது உடம்பில் 94 இடங்களில் காயங்கள் ஏற்பட்டப் பின்னும் இனியும் போர் புரிய முடியாது என்ற சூழ்நிலையிலும் ஏறக்குறைய முடமாகிப் போன போதும் தனது ஆசையை நிறைவேற்றத் தனது வீரர்களிடம் தன்னை தூக்கி வைத்துக் கொள்ளுங்கள் எனது கரங்கள் துடிக்கின்றன எனது இதயம் இரத்தத்தை நான் தருகிறேன் எழுந்து சென்று எதிரியை வீழ்த்து என்கிறது, புஜங்களோ புறப்படு போருக்கு என்கிறது என்று களத்திற்கு சென்று வென்று எதிரிகளை வீழ்த்தி மீண்டும் சோழ சாம்ராஜ்ஜியத்தை அமைத்தான்.

அதுபோல் 2021க்கு முன் பத்து ஆண்டுகள் தி.மு.க ஆட்சியிலிருந்து மக்களுக்கு நல்லாட்சி நல்க முடியவில்லையென்று 2021 தேர்தலில் வென்றே தீர வேண்டுமென வீரமுடன் தனியொரு மனிதனாக துணைக்கு துணிவுமிக்க தோள் கொண்ட சகோதரர் உதயநிதி ஸ்டாலின் துணைக்கு வர தேர்தல் களத்தில் எதிரியரை தோற்கடித்து அண்ணன் தளபதி அவர்கள் தி.மு.க ஆட்சியை அமைத்தார் என்பது உலகம் அறிந்த உண்மை.

அன்று விஜயாலய சோழன்! இன்று தலைவர் ஸ்டாலின் சோழன்! வீணர்கள் வீழ்த்தப் போகிறார்களாம். உடன்பிறப்புகளின் உணர்ச்சிமிகு உழைப்பால் வசைபாடும் வசன வியாபாரிகள் 2026 தேர்தலில் விரட்டியடிக்கப்படத்தான் போகிறார்கள்.

இதிலே இடையிலே எங்குமே தனியாக நின்று டெபாசிட் வாங்கக் கூட வளராத கட்சி பா.ஜ.க.வின் பிரதமர் மோடி வரப் போகிறார் தி.மு.க ஆட்சிக்கு முடிவுரை எழுதப் போகிறார் பாருங்கள்! பாருங்கள்! என்று பம்மாத்துப் பேச்சு பேசியுள்ளார். திராவிட இயக்கத்தால் முகவரி பெற்றவர் இன்று காவி உடை அணிந்து திராவிட மாடல் ஆட்சிக்கு சவால் விட்டுள்ளார்.

பிரதமர் மோடி தேர்தல் பிரச்சாரத்தை துவங்கப் போகிறாராம். அதனால் கழக ஆட்சிக்கு முடிவு வரப் போகிறதாம். என்னே ஆச்சரியம்! எல்லாம் புரிந்தவர்களுக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. இதே போல் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பிரச்சாரம் செய்ய மோடி எட்டு முறை வந்தார். என்ன ஆனது?

**வி.பி. கலைராஜன்**
**கழக இலக்கிய அணிச் செயலாளர்**



எட்டு முறை வந்தும் எட்டுத் தொகுதிகளுக்கு மேல் பா.ஜ.க டெபாசிட் இழந்தது தான் மிச்சம். போட்டியிட்ட தொகுதிகளில் ஒன்றில் கூட வெற்றி பெற முடியவில்லை.

அதேபோல் தற்போது வரும் மோடி மீண்டும் எட்டு முறையல்ல என்பது முறை வந்தாலும் தி.மு.க தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர்கள் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெறப் போகிறார்கள். திராவிட மாடல் ஆட்சி தான் மீண்டும் மலரப் போகிறது. இன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் மக்கள் பேராதரவோடு மீண்டும் முதல்வராகப் போகிறார். மோடிமஸ்தான் மந்திரம் எம்முதல்வர் ராஜதந்திரத்தின் முன் தோற்கப் போவது நிச்சயம்.

எடப்பாடி பழனிச்சாமி தன்னால் தான் அ.தி.மு.க.வில் எல்லாம் நடக்கிறது என்பதை காட்டிக் கொள்வதற்காகவோ அல்லது தோல்வி பயத்தாலோ தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு ஒன்றை அமைத்துவிட்டு அதன் அறிக்கையை அக்குழு வெளியிடும் முன் அவரே திராவிட மாடல் அரசு தந்த திட்டங்களையே சிறிது விரிவுபடுத்தி வெளியிட்டுள்ளார்.

தி.மு.க.வின் 2021க்கான தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட மகளிருக்கு உரிமைத்தொகை மாதம் 1000 வழங்கப்படும் என்பதை நம் தலைவர் முதல்வர் நிறைவேற்றி விட்டார்.

அப்போது இது எப்படி சாத்தியமாகும் என்று கேட்ட முதல் நபர் எடப்பாடியார் தான். ஆனால் இன்றோ தாங்கள் ஆட்சிக்கு வந்தால் 2000 தரப்படும் என்று அறிவித்துள்ளார். இப்போது இவரால் மட்டும் 2000 எப்படி சாத்தியமாகும்? முதல்வரோ உண்மையை உரக்கச் சொல்லி உண்பதற்கு உணவு தந்தாரென்றால் எடப்பாடியாரோ பொய்யை உரலில் குத்தி மக்களுக்கு புண்ணாக்கைத் தருகிறேன் என்கிறார். மக்களுக்கு இது எடப்பாடியாரின் ஏமாற்றும் ஏத்தர் வேலை என்பது புரியாதா?

பெண்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வண்ணம் விடியல் பயணம் திட்டத்தை தந்தார் நம் முதல்வர். இதனால் 900 கோடி பயணங்களுக்கு மேல் நடைபெற்றுள்ளது. உடனே எடப்பாடியார் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என்று அறிவித்துள்ளார். பொய் சொல்ல வேண்டுமென்று முடிவு செய்துவிட்டால் அதற்கு கணக்கா இருக்கிறது! அதனால் தான் வெல்ல முடியாது என்று தெரிந்த பின்னும் பொய் மூட்டையை அவிழ்த்து விட்டுள்ளார்.

வரலாறு தெரிந்த வல்லவர் எடப்பாடியார் தான் ஒரு அரசியல் ஞானி என்ற நினைப்போடு உள்ளவராயிற்றே! 1965ல் தி.மு.க அ.தி.மு.க இரண்டு கட்சிகளும் இல்லையாம் கூறியுள்ளார். 1965 அ.தி.மு.க இல்லை தான். ஆனால் 1949லேயே தி.மு.கவை அறிஞர் அண்ணா தொடங்கி விட்டார். 1957 தேர்தலிலேயே போட்டியிட்டு 15 தொகுதிகளில் அண்ணா, கலைஞர் உட்பட வெற்றி பெற்று அன்றைய காங்கிரசை வியக்க வைத்தனர்.

சேக்கிழார் கதையை சொன்னபோது ஒருமுறை தவறுதலாக பேசிவிட்டார் என்று விமர்சிக்காமல் விட்டுவிட்டோம். ஆனால் ஒவ்வொரு முறையும் இப்படி உளறினால் அதை என்னவென்பது அறியாமை என்று தான் சொல்ல வேண்டும். இந்த லட்சணத்தில் முதல்வர் ஆசை தேவையா?

மேலும் காங்கிரஸ் கட்சி தி.மு.க கூட்டணியில் இருக்கப் போவதில்லையாம். எவ்வளவு ஆசையுடன் எடப்பாடியார் கூறியுள்ளார் பார்த்தீர்களா! அவர் கூட்டணியில் யாரும் பிரிந்து போகக் கூடாது புதிதாக ஒரு கட்சியையாவது சேர்த்திட முயல வேண்டும் என்பதை விடுத்து தி.மு.க கூட்டணி உடையாதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார். தி.மு.க கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலகிவிடும் என்று ராகுல் காந்தி கூறினாரா அல்லது சோனியா காந்தி கூறினாரா? இது பிதற்றல் இல்லையா?

ஏழை எளியவர்கள் பயன்படும் வண்ணம் மன்மோகன் சிங் தலைமையிலான தி.மு.க பங்குபெற்ற அரசு மகாத்மா காந்தி 100 நாள் வேலைத் திட்டத்தை செயலுக்கு கொண்டு வந்தனர். இன்று அந்த பெயரையே பா.ஜ.க மைனாரிட்டி அரசு மாற்றியுள்ளது. இதை என்றைக்காவது எடப்பாடியார் கண்டித்தது உண்டா? 100 நாட்கள் 150 நாட்களாக உயர்த்தப் போகிறாராம். இதற்கு 60... தான் நிதியை ஒன்றிய அரசு தருமாம் மீதம் 40... மாநில அரசு தர வேண்டுமாம். முதலில் எடப்பாடியாரே 150 நாட்களாக உயர்த்துவேன் என்ற பொய்யான வாக்குறுதியை தந்து மக்களை ஏமாற்றப் பார்க்காதீர்கள். ஏற்கனவே பா.ஜ.க ஆட்சியால் 100 நாட்களில் 40 நாட்களுக்கு கூட வேலை தருவதற்கு நிதி தருவதில்லை. பிறகு 150 நாட்கள் என்பது எப்படி சாத்தியம்?

பிரதமர் மோடியுடனும் பாஜகவுடனும் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று சொன்வர்தானே எடப்பாடியார். பிறகு அவர்களோடு ஐந்து வாகனங்களில் மாறி மாறி ஏறிச் சென்று மோடி மற்றும் அமித்ஷா இருவரையும் சந்தித்து விட்டு வந்த பிறகு பா.ஜ.கவுடன் கூட்டணி என்று அறிவித்தீர்களே! இதற்கு பெயர்தான் அரசியல் பித்தலாட்டம். அம்மையார் இருந்த போது பா.ஜ.க தலைவர்கள் ஜஸ்வந்த் கிங், அத்வானி போன்றவர்கள் எவ்வளவோ முயன்றும் அம்மையார் அவர்களை சந்திப்பதையே விரும்பவில்லை. ஆனால் நீங்களோ ஒரே சந்திப்பில் கூட்டணி என்கிறீர்கள். இவைகளையெல்லாம் நீங்கள் மறந்திருக்கலாம். ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

உங்கள் பேச்சை மக்கள் நம்ப மாட்டார்கள். அதனால் தான் இதுவரை அனைத்துத் தேர்தல்களிலும் உங்களுக்கு தோல்வியை மட்டும் தாந்தார்கள். இப்போது நீங்கள் அவிழ்த்து விடும் அனைத்து அறிவிப்புகளும் வெறும் கானல் நீர் என்று அலட்சியப்படுத்துவார்கள்.

விவசாயிகள் நலனைப் பற்றி பேசுகிறீர்களே எடப்பாடியாரே! தமிழ்நாட்டு விவசாயிகள் 100 நாட்களுக்கு மேல் டெல்லியில் பா.ஜ.க அரசை வலியுறுத்தி போராட்டம் நடத்தினார்கள். அப்போது ஒரு நாளாவது தமிழக விவசாயிகளை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினாரா? நீங்கள் அதைப்பற்றி மோடியிடம் பேசியதுண்டா? வேளாண் சட்டம் பா.ஜ.க அரசு கொண்டு வந்தபோது கண்டித்ததுண்டா? நீங்களா விவசாயிகளைப் பற்றிப் பேசுகிறீர்கள்?

தற்போது எடப்பாடியார் தி.மு.க அறிவித்த அறிவிப்புகளில் 90%... நிறைவேற்றவில்லை என்று புளுகியுள்ளார். ஆக அவர் கணக்குப்படி 10%... நிறைவேறியுள்ளோமாம்! எடப்பாடி கண்டுபிடித்துள்ளார். அதையும் இல்லையென்று அவர் சொல்லியிருக்கலாமே. அப்போது தானே மக்களுக்கு எடப்பாடியின் உண்மை தன்மை நன்றாகப் புரிந்திருக்கும். பெண்கள் மற்றும் மாணவிகளுக்கு மட்டுமே மாதம் 4000 ரூபாய் சேரும் வண்ணம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணத் திட்டம், முதியோருக்கு உதவித்தொகை, மகளிர் சுய உதவி குழுக்களுக்கு நிதி, தாயுமானவர் திட்டம், அன்பு கரங்கள் திட்டம், தங்குவதற்கு தோழி விடுதிகள் என்று பெண்கள் உயர்வுக்கான திட்டங்களை மட்டுமே எழுதிக் கொண்டே போகலாம்.

இவைகளெல்லாம் நடைமுறையில் உள்ளன. பெண்கள் பயன் பெற்று வருகின்றனர். இதை இல்லையென்று எடப்பாடியார் மறுப்பாரா? அல்லது மறுக்கத்தான் முடியுமா? நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த கலைஞர் கதை வசனம் எழுதிய வெற்றிப் படம் பராசக்தி 1965ல் வந்ததாம். இதுவும் எடப்பாடியார் சொன்னது தான். பத்திரிக்கைகளில் வந்தது தான். தெரியவில்லை என்றால் வாயைப் மூடிக் கொண்டு சும்மாயிருக்க வேண்டியது தானே! ஏன் இப்படி உளறுகிறார்? உண்மையில் பராசக்தி படம் 1952 ஆக்டோபர் 17ம் தேதி வெளியானது. இது தெரியாமல் அவர் வரலாறு பேசுகிறார்.

நிர்வாகம் செய்ய தெரியவில்லையாம்! முதல்வரைப் பற்றிப் பேசியுள்ளார். இவரது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு சதவீதம்? கூறுவாரா? இன்றைக்கு முதல்வரின் ஆட்சித்திறனால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5%... கூடியுள்ளது. அதாவது தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி 11.19%... பா.ஜ.க ஆளும் எந்த மாநிலத்திலாவது இந்தளவு பொருளாதார வளர்ச்சி உள்ளதா? கூட்டணி கட்சியின் தலைவர் எடப்பாடியார் கூறுவாரா?

பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் திட்டம் நிறுத்தியது யார்? பெண்களுக்கு ஸ்கூட்டர் வழங்குவேன் என்றார் அம்மையார் அதை அவர் ஆட்சி செய்தபோது கொடுக்காமல் நிறுத்தியது ஏன்? இதற்கு விளக்கம் தருவாரா?

தனது 16 வயதிலேயே அறிஞர் அண்ணாவிற்கு பிறந்த நாள் விழா நடத்தி அண்ணாவால் பாராட்டப்பட்டவர் தான் நம்முதல்வர். எடப்பாடியார் அண்ணாவை குறைந்தபட்சம் பார்த்துப் பேசியிருப்பாரா? அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்கையில் அவர் பார்க்க விரும்பும் யாத்திரை ஸ்தலம் என்று எந்த இடத்தைக் கூறினார் என்று இவர் கூறுவாரா?

தினமும் போராட்டங்கள் நடக்கிறதாம் பாவம் மிகவும் வேதனைப்பட்டுள்ளார். போராட்டங்களைத் தூண்டிவிடுபவரே அவர் தானே! தூண்டிவிடுபவருக்கு எப்படி வேதனை வரும்? இவரது ஆட்சியில் எப்படியெல்லாம் கொள்ளையடித்தார்கள் என்பதை இவரது பழைய நண்பர் ஓ.பி.எஸ்யிடம் கேட்டால் தெரியும். புள்ளி விபரத்துடன் கூறுவார். அமித்ஷா இவரது ஆட்சியை மோசமான ஊழல் ஆட்சி என்று கூறினாரே! அதை இவரால் மறுக்க முடியுமா? எனவே எவராயிருந்தாலும் பேசும்போது ஆதாரத்துடன் பேசுங்கள்.

2026 தேர்தல் கழகத்தின் வெற்றிக்கானத் தேர்தல். மக்கள் என்றும் அவர்களுக்கு நலத்திட்டங்களைத் தந்து இல்லங்களில் மகிழ்ச்சி நிரம்ப வைக்கும் நம்முதல்வர் தளபதி அவர்கள் பக்கம் தான். கழகத்திற்கு வெற்றி நிச்சயம்! எதிரணியினருக்கு தோல்வியும் நிச்சயம். வாழ்க தமிழ் நாட்டு மக்கள்! வாழ்க நம்முதல்வர்! மலர்க மீண்டும் திராவிட மாடல் அரசு!